Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.127/2013

Deposition of witness for: PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | : கனிமொழி | Father/Husband Name | : அழகப்பன் |
| Calling | : | Age | : |
| Date | : 23.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 23rd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**1-ம் எதிரி ஆஜர், 3-ம் எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மதுரை, டி.எம் நகரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். சாட்சி காளிராஜ் எங்கள் குடும்ப நண்பர். சாட்சிகள் அர்ஜீணன் மற்றும் போஸ் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருப்பவர்கள். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 23.10.2011-ம் தேதி காலை 8.45 மணியிலிருந்து 9.00 மணிக்கு சாட்சி போஸ் என்பவர் மூலம் ஆஜர் எதிரி வீட்டு வேலைக்கு வந்தார். அவர் வீட்டில் வேலை பார்த்துவிட்டு மதியம் 12.30 மணியளவில் பக்கத்தில் வீட்டு வேலை பார்த்ததற்கு பணம் வாங்க வேண்டும் என்பதற்காக செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு சென்றவர் திரும்ப வரவில்லை. அதன் பின்னர் 2.30, 3.00 மணியளவில் வீட்டிலிருந்த பீரோவை செக் செய்து பார்த்தபோது பீரோவில் இருந்த எனது சேலைகளுக்கு மேல் இருந்த பாக்சில் 8 தங்க வளையல்கள் - 14 பவுன், ஆரம் 5 பவுன், 5 பவுன் செயின், ஜிமிக்கி 1/2 பவுன், மோதிரம் -1 1/2 பவுன், ஓம் டாலர் ஒன்று 4 கிராம் ஆகியவைகள்

காணவில்லை. உடனே நான் சிங்கம்புணரி சென்றிருந்த எனது தாயார் ஜான்சிராணிக்கு தகவல் சொன்னேன். மேற்படி எதிரியை தேடி சென்றோம். அவர் எங்களுக்கு கிடைக்கவில்லை. அதன் பின்னர் 24.10.2011–ம் தேதி ஒத்தக்கடை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ஒரு மாதம் கழித்து நான் கொடுத்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

2) சுமார் 6 மாதம் கழித்து எனது நகை கிடைத்துவிட்டதாக ஒத்தக்கடை காவல்நிலையத்திலிருந்து சிவகாசி காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். அங்கு வைத்து எதிரியை அடையாளம் காட்டச்சொன்னார்கள். நான் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டினேன். எனது நகையையும் அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது நகைகளை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் காணாமல் போன எனது நகைகள். (அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1–ம் எதிரி ஆஜர், 3–ம் எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எங்கள் வீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் 5 நபர்கள். எனது பெற்றோர்கள் எப்போதும் எங்கள் வீட்டில் தான் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் எங்கள் வீட்டு மேல்தளத்தில் ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த அன்று எங்கள் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், எனது பிள்ளைகளும் இருந்தோம். எங்கள் வீட்டில் நகை திருடு போனவுடன் யார்

காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னது என்றால் மறுநாள் நான் தகவல் சொன்னேன். நான் தகவல் கொடுத்தவுடன் எத்தனை போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் ஒரு நபர் மட்டும் தான் வந்தார். அந்த போலீசாரிடம் நான் புகார் கொடுத்தேனா என்றால் ஒத்தக்கடை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். காவல்நிலையத்திற்கு சென்று எனது வழக்கறிஞர் எழுதிய புகாரில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை, நான் தான் புகார் மனு எழுதினேன். எனது வழக்கறிஞர் உடன் இருந்தாரா என்றால் ஆம்.

2) எங்கள் வீட்டில் மொத்தம் எத்தனை அறைகள் உள்ளது என்றால் ஒரு ஹால், இரண்டு பெட்ரூம், கிட்சன், ஸ்டோர் ரூம், பூஜை அறை உள்ளது. எங்கள் இரண்டாவது பெட்ரூமில் சுவற்றில் துளையிட்டு லாக்கர் உள்ளது என்றால் சரியல்ல, கபோர்டு தான் உள்ளது. 23.10.2011–ம் தேதி வேலைக்கு வந்த நபரின் அடையாள அட்டையை வாங்கி சோதனை செய்தேனா என்றால் இல்லை, காலையில் வேலைக்கு வந்தார், மதியம் சம்பவம் நடந்தது. எதிரி எத்தனை மணிக்கு எங்கள் வீட்டிற்கு வேலைக்கு வந்தார் என்றால் 9, 9.30 மணி இருக்கும். எவ்வளவு நேரம் அவர்கள் எங்கள் வீட்டில் வேலை செய்தார் என்றால் 12.30 மணிக்கு சென்றுவிட்டார். அந்த இரண்டு மணி நேரமும், நானும், எனது பிள்ளைகளும் வீட்டில் தான் இருந்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரியை சுமார் 16 வருடங்களுக்கு பின்னர் எவ்வாறு தற்போது சரியாக அடையாளம் காட்டுகிறேன் என்றால் ஆஜர் எதிரியை நான் சம்பவத்தன்று பார்த்தேன், அதன் பின்னர் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த பின்னர் பார்த்தேன், தற்போது பார்க்கிறேன், அவரை எனக்கு நன்கு அடையாளம் தெரியும்.

3) ஒப்புதல் வாக்குமூலம் எதிரி எங்கு கொடுத்தார் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. எங்கள் வீட்டின் கபோர்டின் சாவி என்னிடம் தான் இருக்கும் என்றால் அந்த கபோர்டை நாங்கள் பூட்ட மாட்டோம். ஆஜர் எதிரியை எனக்கு யார் அறிமுகம் செய்தார் என்றால் எனக்கு தெரிந்த நபர்களிடம் வேலைக்கு ஆள் வேனும் என்று சொல்லி வைத்தேன், அவர்கள் மூலம் தெரிந்துகொண்டேன். ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் நகை எடுத்த போது சத்தம் எதுவும் எனக்கு கேட்கவில்லை என்றால் ஆம். எங்கள் வீட்டில் காணாமல் போன நகைகளுக்கான ரசீதை நான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.

4) நீதிமன்றத்திலிருந்து நான் பெற்று சென்ற நகை என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் 24.11.2011–ம் தேதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த புகார் மனுவில் உள்ள 24.11.2011 என்று எழுதப்பட்டுள்ள தேதியும், மற்ற விபரங்களும் என்னுடைய கையெழுத்து தான் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடந்த மறுநாள் புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன், போலீசாரும், எனது வழக்கறிஞரும் கேட்டுக்கொண்டதினால் பின்னிட்ட தேதியில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் வேலைக்கு சேரவில்லை, எந்த பொருளையும் திருடவில்லை, நான் போலீசார் கேட்டுக்கொண்டதினால் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

**3–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**